**4 தடாதகைப் பிராட்டியார் திரு அவதாரப் படலம்**

பாண்டிய மன்னன் மலையத்வஜனுக்கும் காஞ்சனமாலைக்கும் மணமாகி நீண்ட நாட்களாகியும் மகப்பேறு கிட்டவில்லை. அதனால் அஸ்வமேத யாகம் செய்ய எண்ணிய பாண்டியன் தொண்ணூற்றொன்பதையும் முடித்துவிட்டான். இன்னும் ஒன்றைச் செய்தால் தன் இந்திர பதவி பறிபோய்விடுமே என அஞ்சிய இந்திரன் பாண்டியனுக்கு மகப்பேறு பெற்றிட புத்திர காமேஷ்டி யாகம் செய்யுமாறு கூறினான். அதன் படி பாண்டிய மன்னனும் யாகம் செய்ய யாக குண்டத்திலிருந்து மூன்று தனங்களைக் கொண்ட மூன்று வயதுடைய ஓர் பெண் குழந்தை காஞ்சனையின் மடியில் வந்து அமர்ந்தது.

காஞ்சனை அக்குழந்தையை அங்கையர்கண்ணி என்று அழைத்தாள். அக்குழந்தைக்கு மீனாக்ஷிசி என்ற மற்றொரு பெயருண்டு. மீன் எப்போதும் கண் இமைப்பதில்லை. தன் குஞ்சுகளுக்கு தன் கண்களாலேயே இரையூட்டும். அது போல் அழகிய கண்களையுடைய இவள் தான் கண்யிமைக்காமல் தன் மக்களை பாதுகாக்கிறாள்.

பராசக்தியே மகளாக வந்ததை அறியாத பாண்டியன், மகனுக்குப் பதில் மகளாக இருப்பதோடல்லாமல் குழந்தைக்கு மூன்று தனங்கள் இருப்பதை எண்ணி வருந்தினான்.

அப்போது ஓர் அசரீரி மகள் என்று வருந்தாமல் மகனைப்போல் எல்லா சடங்குகளும் செய்து வளர்க்குமாறு கூறியது. மேலும் தடாதகை எனப்பெயரிட்டு முடியும் சூட்டுமாறும், அவளுக்கு தன் மணாளனின் தரிசனம் ஏற்ப்பட்டதும் அவளது மூன்றாவது தனமும் மறையும் என கூறியது.

மலையத்வஜன் அவ்வாறே அம்மைக்கு எல்லா சடங்குகளும் செய்து முடிசூடினான். இவ்வாறு கன்னிப் பருவத்திலேயே தடாகைப்பிரட்டியார் நல்லாட்சி புரிந்ததால் பாண்டிய நாடு கன்னி நாடு எனப்பெயர் பெற்றது.

**பல்லவி**

மகப்பே றின்றித் தவித்த மலையத் வஜனுக்கு
மகளாய் மகேஷ்வரியை அவதரிக்கச் செய்தாய்

**அனுபல்லவி**

மகள்தானே என நினைத்து மனங் கலங்கிடாமலே
மகனாகக் கொண்டவளை வளர்த்திடச் சொன்னாய்

**சரணம்**

தனம் மூன்றுடைய தடாதகையின் தந்தையிடம்
தகுந்த மணாளனின் தரிசனம் கண்டதுமோர்
தனமும் அந்தக்கணமே மறைந்திருடும் என்றுசொல்லி
கன்னிக்கே முடிசூட்டி உன்னடி அடையச் செய்தாய்